IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No.40/2018

Deposition of Witness for PW1.

Name : திருமதி.மேரி செலின்
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.06.2025.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி. எனது கூடுதல் முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 13.06.1984 தேதியிட்ட எனது அம்மா வியாகம்மாள் வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து எனக்கு எழுதி கொடுத்த தான பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-1, ( சான்றிட்ட நகல் என்பதாலும், அசல் ஆவணம் தாக்கல்செய்யப்படவில்லை என்ற காரணத்தால் முன்பே அ.வ.எண்.143/2013 தள்ளுபடி செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 22.02.1992 தேதியிட்ட ஜோசப் சிறில் பெயரில் உள்ள கிரையபத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ,2, 01.07.2010 தேதியிட்ட ஜோசப் சிறில் , 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் பத்திரம் ஒளிநகல் வா.சா.ஆ-3, 15.02.2011 தேதியிட்ட 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4, கூடுதல் மாவட்ட உரிமையியல் நிதிமன்றம், இரணியல் அ.வ.எண்.143/2013ல் நான் தாக்கல் செய்த வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-5, அந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் ஒளிநகல் வா.சா.ஆ-6, ( ஒளிநகல் என்பதால்

1 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது), வழக்கு பட்டிகை சொத்தினை காட்டும் புகைப்படம் 4 எண்ணம் சிடியுடன் கூடியது வா.சா.ஆ–7ன் வரிசை, வழக்கு பட்டிகை சொத்தினை பொறுத்து எனது பெயரிலான பட்டா ஒளிநகல் வா.சா.ஆ–8, ( ஒளிநகல் என்பதால் 1 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 13.10.2004 தேதியிட்ட எனது பெயரிலான வழக்கு பட்டிகை சொத்தின் தீர்வை ரசீது ஒளிநகல் வா.சா.ஆ–9. ( ஒளிநகல் என்பதால் 1 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.